## சுருக்கம்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை – பயிற்சி பிரிவு – தொழிற்பயிற்சி நிலையங்களில் 10–ம் வகுப்பு தேர்ச்சியை அடிப்படைக் கல்வித் தகுதியாகக் கொண்ட தொழிற்பிரிவுகளில் 2021–2022–ம் கல்வியாண்டிற்கான பயிற்சியாளர்கள் சேர்க்கை – அனுமதி – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (எஸ்2) துறை**

அரசாணை (டி) எண். 262

நாள் : 01.07.2021
பிலவ வருடம் – ஆனி –17
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.96, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (எஸ்2) துறை, நாள் 24.06.2019.
2. அரசாணை (நிலை) எண்.130, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (எஸ்2) துறை, நாள் 13.08.2020.
3. அரசாணை (நிலை) எண்.48, பள்ளிக்கல்வித் (அ.தே) துறை, நாள் 25.02.2021.
4. தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள், ந.க. எண்.34462/பிடி1/இ1/2021, நாள் 14.06.2021.
5. அரசாணை (டி) எண்.152, உயர்கல்வித் துறை, நாள் 25.06.2021.
6. இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அவர்களின் கடித ந.க.எண்:12061/கைப1/2021, நாள்: 29.06.2021.

----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2019–ம் ஆண்டு முதல் தொழிற்பயிற்சி நிலையங்களில், 10–ம் வகுப்பு தேர்ச்சியை அடிப்படைக் கல்வித் தகுதியாகக் கொண்ட தொழிற்பிரிவுகளுக்கு, 10–ம் வகுப்பில் பெற்ற மொத்த மதிப்பெண்களின் சராசரி அடிப்படையில் சேர்க்கை மேற்கொள்ள ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி 2020–ம் ஆண்டு முதல் தொழிற்பயிற்சி நிலையங்களில் இணையதளம் வாயிலாக கலந்தாய்வு சேர்க்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர், பின்வரும் செயற்குறிப்பினை சமர்ப்பித்துள்ளார்:-

(அ) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2020–2021–ம் கல்வியாண்டில் தமிழ்நாடு மாநில பாடத்திட்டத்தின் கீழ் செயல்படும் அனைத்து அரசு பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், மெட்ரிகுலேசன் பள்ளிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகளில் 9–ம் வகுப்பு பயிலும் மாணாக்கர் அனைவரும் முழு ஆண்டுத் தேர்வு மற்றும் 10, 11–ம் வகுப்புகளில் பயிலும் மாணாக்கர் அனைவரும் பொதுத் தேர்வுகள் ஏதுமின்றி தேர்ச்சி பெறுகின்றனர் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

(ஆ) மேலே நான்வதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின்படி, பள்ளிகளில் 10–ம் வகுப்பு முடித்து மேல்நிலைக்கல்வி பயில்வதற்கும், பல்தொழில் நுட்பக் கல்லூரிகள், தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பிற மேற்படிப்பு நிறுவனங்களில் சேருவதற்கும் 10–ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் அவசியமாகிறது என குறிப்பிட்டு, தற்போது 2021–2022–ம் கல்வியாண்டில் 11–ம் வகுப்பில் சேர உள்ள மாணவர்களுக்கு, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வும், 2019–2020–ம் கல்வியாண்டில் ஒன்பதாம் வகுப்பு முழு ஆண்டுத் தேர்வும் நடைபெறாத நிலையில், 11–ம் வகுப்பு மற்றும் சம்பந்தப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களுக்கான சேர்க்கைப் பணிக்காக மட்டும் ஒன்பதாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் அளிக்க வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

4. எனவே, 2021–2022–ம் கல்வியாண்டில், தொழிற்பயிற்சி நிலையங்களில் 10–ம் வகுப்பு தேர்ச்சியை அடிப்படைக் கல்வித் தகுதியாகக் கொண்ட தொழிற்பிரிவுகளில், 2020–2021–ம் கல்வியாண்டில் 10–ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அவர்களது 9–ம் வகுப்பு மதிப்பெண்ணின் அடிப்படையிலும், அதற்கு முந்தைய ஆண்டுகளில் 10–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு அவர்களது 10–ம் வகுப்பு மதிப்பெண்ணின் அடிப்படையிலும், ஒருசேர தரவரிசை பட்டியல் வெளியிட்டு, அதன் அடிப்படையில் இடஒதுக்கீடு முறையை பின்பற்றி பயிற்சியாளர் சேர்க்கை மேற்கொள்ள அரசாணை வழங்குமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2021–2022–ஆம் கல்வியாண்டில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு பட்டயப் படிப்பு மாணாக்கர் சேர்க்கைக்கு, 2021–2022–ஆம் கல்வியாண்டில் 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு, அம்மாணாக்கர்களின் 9–ஆம் வகுப்பு மதிப்பெண்ணின் தரவரிசை அடிப்படையில், இடஒதுக்கீடு முறையை பின்பற்றி மாணாக்கர் சேர்க்கையை நடத்திக் கொள்ள அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

6. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, தொழிற்பயிற்சி நிலையங்களில், 10–ம் வகுப்பு தேர்ச்சியை அடிப்படைக் கல்வித் தகுதியாகக் கொண்ட தொழிற்பிரிவுகளில், 2020–2021–ஆம் கல்வியாண்டில் 10–ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு, மேலே நான்காவதாகப் பிறப்பிக்கப்பட்ட செயல்முறை ஆணையில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி அளிக்கப்படும் 9–ம் வகுப்பு மதிப்பெண்ணின் அடிப்படையிலும், முந்தைய ஆண்டுகளில் 10–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு அவர்களது 10–ம் வகுப்பு மதிப்பெண்ணின் அடிப்படையிலும், ஒருசேர தரவரிசை

பட்டியலினை இடஒதுக்கீடு முறையை பின்பற்றி வெளியிட்டு, அதன் அடிப்படையில் 2021–2022–ம் கல்வியாண்டிற்கு மட்டும் பயிற்சியாளர் சேர்க்கைப் பணிகளை மேற்கொள்ள வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆர். கிர்லோஷ் குமார்**
**அரசுச் செயலாளர்**

**பெறுநர்**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர், சென்னை – **600 032.**

**நகல்:-**

மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– **600 009.**

செயலரின் முதுநிலை தனிச்செயலர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, செ சென்னை– **600 009.**

இருப்புக் கோப்பு / உபரி நகல் (கோ.எண். **10438**/எஸ்2 /2021).

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்**

01/07/2021